[Mr. Speaker] [24th April 1962

தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960ல் அவருக்குப் "பத்மபூஷன்" என்னும் விருது அளிக்கப்பட்டது. 1962 பிப்ரவரி 26-ம் தேதி மறைந்தார்.

இவர்களின் மறைவுக்கு இச் சபை அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் யாவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றார்கள்.)

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Old age pension

* 1 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the details of the scheme for granting old age pension to aged destitutes;

(*b*) the number of persons so far benefited by this scheme; and

(*c*) the expenditure anticipated to be incurred during 1962–63 in respect of this scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) The scheme takes effect only from 1st April 1962. The number of persons benefited by the scheme will be available only after the working of the scheme for some time.

(*c*) A provision of Rs. 2 lakhs has been made in the Interim Budget for 1962–63.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டம் வரவேற்கத் கூடிய ஒரு திட்டம். தேர்தலுக்கு முன்பு இந்தத் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்யும்போது இருந்த வேகத்தை இப்போது அமுல் நடத்துவதற்கும் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தவிர இதற்கு ஒதுக்கி இருக்கக்கூடிய நிதி போதுமானதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதல் வருஷத்தில் அதிகமாக செலவு ஆகாதென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது 2 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற அக்கறையைப்பற்றி கனம் அங்கத்தினருக்கு ஐயம் வேண்டாம்.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற ரூபாய் தொடர்ந்து வருஷா வருஷம் ரிகரிங் செலவாக இருக்கக்கூடியது. அப்படி இருக்க பிரதி வருஷம் எவ்வளவு செலவாகும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது?

[a] Printed as Appendix I on pages 145–146.

24th April 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இந்த விவரமெல்லாம் சேகரிக்கப்பட்டுவருகிறது. மனுக்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டிலே எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்த்த பிறகு மற்ற ஆண்டுகளில் எவ்வளவு செல வாகும் என்பது மதிப்பிடப்படும். இப்போது இன்டெரிம் பட் ஜெட்டில் 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாம் சரியான பட்ஜெட் வெளியிடும்போது இன்னும் எல்லா விவரங் களும் பரிசீலனைக்கு வந்து அதன் பேரில் ஒதுக்கப்பட்ட தொகையை அதிகரிக்கலாம்.

SRI V. SANKARAN: பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் வரமாட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. சர்க்கார் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்காமல் இருப்பதனுல் தான் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அவர்கள் கஷ்டத்தைப் போக்க, இந்தத் திட்டத்தை அவர்களுக்கு விஸ்தரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தத் திட்டத் தைப்பற்றிய விவரமெல்லாம் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக் கிறது. இதில் என்னென்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அதைத் தவிர வேறுவிதமாக செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் கிடையாது.

SRI M. KALYANASUNDARAM: இப்பொழுது இதற்காக வெளியிடப்பட்டிருக்கின்ற விதிகள் சட்டசபையில் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனிக்கேள்வி போட வேண்டும்.

SRI J. MATHA GOWDER: இப்பொழுது மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே மனிவிக்கு 55 வயது பூர்த்தி ஆனபிறகுதான் அவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக 55 வயது அடைவதற்கு முன்பே அவர்கள் சக்தியை இழந்து விடுகிறுர்கள். ஆகவே அவர்களுக்கு குறிப்பிட்டிருக்கிற வயதைக் குறைப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மாற்றுவதாக இப்பொழுது அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

SRI M. S. MANI: முதியோர்களின் வயதை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் எந்த முறையை கடைப்பிடிக்கிறுர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவர்களும் வாக்கா ளர்கள். அவர்களுடைய வயது வாக்காளர்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேறு குறிப்புகள் இருந்தால் அவைகளும் பரிசீலிக்கப்படும். அதுவும் இல்லையென்றுல் டாக் டர்கள் வயதை நிர்ணயிப்பார்கள்.

SRI A. K. SUBBIAH : அங்கஹீனம் உள்ளவர்களுக்கு இப்போது குறிப்பிடப்பட்டிருக்கும் வயதை கொஞ்சம் குறைப பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதுதான் இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்த்து, அதற்குமேல் என்ன செய்வது என்பது யோசிக்கப்படும்.

SRI K. PONNIAH : மலைப்பிரதேசத்தில் அடர்ந்த காடுகளில் வாழும் ஆதிவாசிகளின் வயதைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் எந்த வழியைக் கடைப்பிடித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு ஒரு ரிகார்ட் டும் இல்லையென்றால் டாக்டர்கள் அளிக்கும் ரிப்போர்ட்டை வைத்து நிர்ணயிக்கலாம். இதைத்தவிர வேறு என்னசெய்யலாம் என்பதை பின்னால் யோசிக்கலாம்.

SRI V. SANKARAN : மனைவிக்கு 55 வயது ஆன பிறகுதான் புருஷர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதேபோல் பெண்கள் விஷயத் திலும் ஆண்களுக்கு 55 வயது ஆகிவிட்டால் அவர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவிசெய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு குறிப் பிட்டதுபோல் இப்போது சர்க்கார் விதியை மாற்றுவதாக உத்தேசம் இல்லை.

SRI V. KRISHNAMOORTHY : கனம் சபாநாயகர் அவர்களே, முதியோர்களுக்கு நிதி வழங்கும் திட்டம் முதல் முதல் இந்த மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதா? இது ஏற்கெனவே பல மாகாணங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்று சர்க்காருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு சில மாகாணங்களிலே இந்த திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறதென்று சர்க்காருக்கு நன்றாகத் தெரியும்.

SRI M. KALYANASUNDARAM : ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன என்பதைப் பற்றிய தகவல் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதைப்பற்றிய தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Government think of constituting a medical board to examine and determine the age of those people who are not able to produce documentary evidence regarding their age?

24th April 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. மனுக்களைப்பற்றி என்ன செய்ய வேண்டுமென்பதை யோசித்து நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. முதலில் இவைகளை பரிசிலனை செய்து பின்னால் விதிகளை எவ்வாறு மாற்றவேண்டுமென்பது யோசிக்கப்படும்.

*2 *Q.*—**SRIMATHI T. N. ANANDANAYAKI (on behalf of SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM):** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வயோதிக ஆண்கள், பெண்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் எப்போதிலிருந்து அமுலுக்கு வருகிறது?

(இ) பென்ஷனுக கொடுக்கும் தொகை எவ்வளவு?

(உ) பென்ஷன் பெறுபவருக்கு வரையறுக்கப்பட்ட வயது என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) 1st April 1962.

(இ) Rs. 20 per mensem for each destitute.

(உ) Sixty-five years and over. For destitutes who are incapacitated to earn a living due to blindness, leprosy, insanity, paralysis or loss of limb, the age limit is 60.

SRI M. KARUNANITHI : முதியோர்களுக்கு உதவி அளிக்கும் விஷயமாக விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த விண்ணப்பங்களை சிபாரிசு செய்ய வேண்டுமென்றால் அவற்றில் யார் யார் கையெழுத்து வேண்டும் என்பதைப்பற்றிய விளக்கம் அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. S. MANI : பெற்ற பிள்ளைகளால் வீட்டை விட்டு விரட்டப்பட்ட முதியோர்களுக்கு இந்த திட்டத்தை விஸ்தரித்துக் கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலில் மனுக்கள் வரட்டும், அதன் பிறகு அதைப்பற்றி எப்படி விதிகளை மாற்ற வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் யோசிக்கலாம்.

SRI K. A. MATHIALAGAN : Will the Government kindly consider reducing the age limit to 55 as it is the time when people retire from public services and become unable to do normal work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே குறிப்பிட்டேன். இப்பொழுது சில விதிகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்த்த பிறகுதான் விதிகளை எப்படி மாற்றி அமைக்க வேண்டுமோ அப்படியெல்லாம் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.